சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி துறை – தேர்வுப் பிரிவு – வணிகவியல் தேர்வுகளை நடத்த நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே. 4)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.237** **நாள் 08.02.2021**

**சார்வரி, தை 26,**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.153, உயர் கல்வித் (பி1)துறை, நாள் 27.10.2020.
2. அரசாணை (நிலை) எண்.674, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 31.08.2020
3. தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரியத் தலைவர் கடித எண் 108899–2/ஆர்4/2020, நாள் 01.02.2021.

*******

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாணாக்கர்களின் நலன் கருதியும், தற்சமயம் உள்ள சூழ்நிலையின் அடிப்படையிலும், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் 2020–ம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய வணிகவியல் தேர்வுகளுக்கு பதிலாக, ஒட்டுமொத்தமாக 2021–ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வணிகவியல் தேர்வுகளை நடத்த அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2021–ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடத்தப்படவுள்ள வணிகவியல் தேர்வுகளுக்குரிய திட்டநிரல் கால அட்டவணையினை தயாரித்து அதனை தொழில்நுட்பக் கல்வித் துறையின் இணையதளத்தில் வெளியிட தொழில்நுட்பக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரியத் தலைவர், மேலே ஒன்று மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் பெறப்பட்ட ஆணைகளின்படி வணிகவியல் தேர்வுகள் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட வேண்டியுள்ளது என்றும், தற்பொழுது கொரோனா தொற்று பரவுவதை தவிர்க்கும் பொருட்டு தேர்வு மையங்களில் தேர்வர்களின் பாதுகாப்பு நலன் கருதி சில மாற்றங்கள் செய்து தேர்வுகள் நடத்த தேர்வுக்குழுவின் பரிந்துரைகளின்படி, மார்ச்/ஏப்ரல் 2021-ல் வணிகவியல் தேர்வுகளை நடத்த ஏதுவாக, வணிகவியல் தேர்வுகளில் பங்கேற்கும் மாணாக்கர்கள் / தேர்வு நடத்தும் அதிகாரிகள் / பயிலக உரிமையாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் வணிகவியல்

தேர்வு மையங்களில் பின்பற்ற வேண்டிய மாதிரி இருக்கை திட்டம் ஆகியவற்றிற்கு ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரியத் தலைவரின் மேற்காணும் கருத்துருவானது அரசால் பரிசீலிக்கப்பட்டது. மார்ச் / ஏப்ரல் 2021-ல் வணிகவியல் தேர்வுகளை நடத்த ஏதுவாக, வணிகவியல் தேர்வுகளில் பங்கேற்கும் மாணாக்கர்கள் / தேர்வு நடத்தும் அதிகாரிகள் / பயிலக உரிமையாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் வணிகவியல் தேர்வு மையங்களில் பின்பற்ற வேண்டிய மாதிரி இருக்கை திட்டம் ஆகியவற்றை இணைப்புகளில் கண்டுள்ளவாறு அரசு வெளியிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ராஜீவ் ரஞ்சன்**
**அரசு தலைமைச் செயலாளர்**

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை 5
அரசு முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை, சென்னை–9,
தொழில்நுட்பக் கல்வி இயக்கக தேர்வு வாரியத் தலைவர், சென்னை – 25.

நகல்:
உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
இ.கோ/உதிரி.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

8/2/21

**பிரிவு அலுவலர்**

## இணைப்பு –1

## வணிகவியல் தேர்வில் பங்கேற்கும் மாணாக்கர்கள் / தேர்வு நடத்தும் அதிகாரிகள் / பயிலக உரிமையாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP).

1. தேர்வு மையத்தில் தூய்மை பணியாளர்கள் கொண்டு முன்கூட்டியே தூய்மை பணியினை மேற்கொள்ளுதல் வேண்டும்.
2. வணிகவியல் தேர்வு மையங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை தேர்வு நடத்தப்படும்.
3. வணிகவியல் தேர்வில் கலந்துகொள்ளும் மாணாக்கர்கள் / தேர்வு நடத்தும் அதிகாரிகள் / பயிலக உரிமையாளர்கள் குறைந்தபட்சம் மூன்று அடுக்கு (Minimum triple layer face mask) பாதுகாப்புக் கொண்ட முக கவசம் அணிந்து வரவேண்டும்.
4. மாணாக்கர்கள் வணிகவியல் தேர்வில் கலந்து கொள்ளுவதற்கு முன்பு கைகளை சோப்பு அல்லது கிருமிநாசினி மூலம் (sanitizer) சுத்தம் செய்யவேண்டும்.
5. வணிகவியல் தேர்வு மையத்தில் தேர்வு எழுத வரும் மாணாக்கர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வெப்ப சோதனை (Temperature Scanner) செய்யப்படவேண்டும். அதில் வெப்பநிலை அதிகமாக இருந்தால் அந்த தேர்வர்களுக்கு தனி அறை ஒதுக்கீடு செய்து தேர்வு நடத்த வேண்டும்.
6. வணிகவியல் தேர்வு நடைபெறும் தேர்வு மையத்தில் ஒவ்வொரு மாணாக்கருக்கும் இடையில் குறைந்தபட்சம் சுமார் 2 மீட்டர் தூரம் இடைவெளி கடைபிடிக்கப்பட வேண்டும்.
7. வணிகவியல் தேர்வு மையத்தில் நோய் வாய்பட்ட / கொரோனா வைரஸ் தாக்குதல் அறிகுறியுள்ள மாணாக்கர்கள் மற்றும் ஊழியர்களை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது.
8. நுழைவுச்சீட்டு (Hall Ticket) சரிபார்க்கும் இடத்தில் தேர்வு மையங்களுக்குள் வரும் ஒவ்வொரு நபரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றை பதிவு செய்வதற்கான பதிவேடு பராமரிக்கவேண்டும். தேவையற்ற உபகரணங்களை தேர்வு அறைக்குள் அனுமதிக்க கூடாது.
9. வணிகவியல் தேர்வுக்கு சம்பந்தப்படாதவர்கள் யாரையும் தேர்வு மையங்களுக்குள் அனுமதித்தல் கூடாது.
10. வணிகவியல் தேர்வு நடைபெறும் தேர்வு மையத்தில் தேர்வு நடத்தும் அதிகாரி கையுறை மற்றும் முககவசம் அணிந்திருக்க வேண்டும். தேர்வர்கள் முககவசம் அணிந்திருக்கவேண்டும்.
11. தேர்வு மைய வளாகத்தில் தேநீர் /காபி / திண்பண்டங்கள் விற்பனை கூடங்கள் அமைத்தல் கூடாது.
12. வணிகவியல் தேர்வு நடைபெறும் தேர்வு மையத்திற்குள் இருக்கும் அனைவரும் தேநீர் /காபி அருந்துதல் தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் இதனால் முக கவசத்தை அடிக்கடி நீக்கம் செய்ய வேண்டியிருப்பதால் கொரோனா தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது

13. தேர்வு மையங்களில் தேவையான அளவு முக கவசம் / கிருமி நாசினி / சோப்பு வைத்துக் கொள்ள வேண்டும்.

14. வணிகவியல் தேர்வு நடைபெறும் தேர்வு மையத்தில் தும்மல் மற்றும் இருமல் ஏற்படாமல் தவிர்க்க தேர்வு மையத்தின் உள்ளேயும் அதன் சுற்றுபுறத்தையும் தூசி படியாமல் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

15. மாநகராட்சி / மாவட்ட / நகராட்சி / தாலூக்கா அளவிலான மருத்துவமனை பணியாளர்களின் ஒத்துழைப்புடன் அவசர மருத்துவகுழு அமைத்துக் கொள்ள வேண்டும்.

16. வெளிமாநிலத்தில் இருந்து வரும் தேர்வர்கள் தேர்விற்கு இரு தினங்களுக்கு முன்பாக கொரோனா வைரஸ் பரிசோதனை செய்து அதன் எதிர்மறை அறிக்கையினை தேர்வு அன்று அளித்தல் வேண்டும்.

17. தேர்வு மையத்தில் கண்டிப்பாக சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

**ராஜீவ் ரஞ்சன்**
**அரசு தலைமைச் செயலாளர்**

**// உண்மை நகல் //**

8/2/21

**பிரிவு அலுவலர்**

## இணைப்பு – 2

## இருக்கை திட்டம்

தட்டச்சு தேர்வு நடைபெறும் ஒவ்வொரு தேர்வு மையத்திலும் சமூக இடைவெளியை பின்பற்றும் வகையில், ஒரு தேர்வரின் இருக்கைக்கு முன், பின், இரு பக்கவாட்டுகளிலும் 2 மீட்டர் இடைவெளியில் இருக்கைகள் அமைக்க வேண்டும்.

மேலும் சுருக்கெழுத்து, கணக்கியல் மற்றும் தட்டச்சு தேர்விற்கு தேர்வர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் தேர்வு மையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

### மாதிரி இருக்கை திட்டம்

| Col.1 | Col.2 | Col.3 | Col.4 |
|---|---|---|---|
| Candidate's Roll.No | Candidate's Roll.No | Candidate's Roll.No | Candidate's Roll.No |
| 1 | 4 | 7 | 10 |
| Empty Space | Empty Space | Empty Space | Empty Space |
| 2 | 5 | 8 | 11 |
| Empty Space | Empty Space | Empty Space | Empty Space |
| 3 | 6 | 9 | 12 |
| Empty Space | Empty Space | Empty Space | Empty Space |

ராஜீவ் ரஞ்சன்
அரசு தலைமைச் செயலாளர்

// உண்மை நகல் //

திரு. [signature] 8/2/21

பிரிவு அலுவலர்

[signature] 03/02/21